விலை சதம் 25

# ஈழநாடு

மலர்: 16 | The Eelanadu | இதழ்: 5
யாழ்ப்பாணம் | மாசி 3 | முஹறம் 21 | வெள்ளிக்கிழமை | 15—2—74

18 FEB 1974

**'ஈழநாடு' சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி - வாரமலர் [உட்பட] | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 34-00 | ரூ. 6-00 |
| 6 மாதம் | ரூ. 67-00 | ரூ. 12-00 |
| 1 வருடம் | ரூ. 132-00 | ரூ. 23-00 |

[ஆள் மூலம் விநியோகம்]
(யாழ் மாநகரசபை எல்லைக்குள்)

| | தினசரி - வாரமலர் (உட்பட) | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 26-00 | ரூ 5-00 |
| 6 மாதம் | ரூ. 51-00 | ரூ 10-00 |
| 1 வருடம் | ரூ. 100-00 | ரூ. 18-00 |

# ஹைதராமணிக்கு 72 வருட கடூழியம்; 10 லட்சம் அபராதம்!

## 4 எதிரிகளும் 4 வருட சிறைவாசமே அனுபவிப்பர்

### லட்சக்கணக்கில் அபராதம்: 2 மாதத்துக்குள் செலுத்த வேண்டும்

கொழும்பு, வியா

அந்நியச் செலாவணி மோசடி வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஆறு பேர்களில் முதல் நான்கு எதிரிகளுக்கும் கடூழியச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்து நீதிவிசாரணைக் கமிஷன் (செலாவணிமோசடி) இன்று தீர்ப்பளித்தது. இரண்டு எதிரிகளுக்குத் தவணை முறைச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுமெனத் தெரிவித்தகமிஷன் தலைவர் இம்மாதம் 25ந் தேதி தண்டனை அறிவிக்கப்படுமென்றார்.

**72 1/2 வருடம் சிறைத்தண்டனை**

முதல் எதிரியான பி. ஹைதராமணி 27 குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாகக் காணப்பட்டு ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் நான்கு வருடம் முதல் ஆறுமாதம் வரையான தண்டனை விதிக்கப்பட்டது. இதன்படி அவருக்கு எழுபத்திரெண்டரை ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை கிடைத்தது. ஆனால் தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டதால் மொத்தம் நான்குவருடச் சிறைத்தண்டனை அனுபவிப்பார்.

இதேபோல் இரண்டாம் எதிரி ஸ்ரீபன் கஸடோவிச், மூன்றுவது எதிரி டாக்டர் கிளிகோமிலாடன் ஆகியோருக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழும் நான்கு வருடம் முதல் ஆறு மாதங்கள்வரையான கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களும் மொத்தமாக நான்குவருடக் கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிப்பர்.

நான்காவது எதிரி வி. சூரிஜியானிக்கு ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

**25ம் திகதி தீர்ப்பு**

5-ம் எதிரியான கே. சே. ஜக்தியானி, 6-ம் எதிரியான டி. எஸ். சப்ஞானி ஆகிய இருவருக்கும் இம்மாதம் 25-ம் திகதி இவர்களின் கைரேகைகள் பதியப்பட்ட பின்னர் தவணைமுறைச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுமென்று கமிஷன் தலைவர் தெரிவித்தார்.

**லட்சக்கணக்கில் அபராதம்**

சிறைத்தண்டனையுடன் முதலாம் எதிரி ஹைதராமணிக்கு பத்துலட்சத்து நாற்பதினாயிரத்து அறுநூற்றி அறுபது ரூபாவும் இரண்டாம் எதிரி ஸ்ரீபன் கஸடோவிற்கு எட்டு லட்சத்து 19,243 ரூபாவும் மூன்றாவது எதிரி டாக்டர் கிளிகோமிலடானுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

### "சமூக விரோதச் செயல்"

[கொழும்பு, வியா]

"வெளிநாட்டு செலாவணியைப் பெறுவதில் நாடு கஷ்டம் அனுபவிக்கும் இவ்வேளையில் இவ்வழக்கின் எதிரிகள் மேற்கொண்ட செலாவணி மோசடி மிகவும் பாரதூரமான சமூக விரோதச் செயல்" என்று வெளிநாட்டு செலாவணி மோசடி சம்பந்தமான குற்றவியல் நீதி விசாரணைக் கமிஷன் தலைவர் திரு ஜி. பி. சில்வா தெரிவித்தார்.

இக் மோசடியில் ஈடுபட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்ட 6 எதிரிகளுக்கும் இன்று தீர்ப்பு வழங்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த மோசடிகளைச் செய்தது சாதாரண பாமரமக்கள் அல்ல; ம் கல்வி அறிவும் பணபலமும் மிக்கவர்களே இந்த மோசடியில் ஈடுபட்டிருந்தனர். ஒரு நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியை தமது சொந்த நலனுக்காக பயன்படுத்துவது மன்னிக்க முடியாத குற்றம் என்றும் திரு. சில்வா கூறினார்.

1973-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி ஆரம்பமான இந்த கமிஷன் விசாரணை முன்னுள் பிரதம நீதியரசர் திரு. ஜி. பி. ஏ. சில்வா (தலைவர்), நீதியரசர்கள் திரு. டி. கியூ. எம். சிறிமன்ன, திரு. ஜெயபத்திரான ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

## ஜி. சி. ஈ. சாதாரணபரீட்சைமுடிவு:
### இவர்களுக்கு மட்டுமே மறுபரிசிலனைச் சலுகை

[கொழும்பு, வியா]

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரண தரம் பரீட்சை முடிவுகள் மீண்டும் பரிசீலனை செய்யப்பட மாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் பூகொட பிரேமரத்ன இன்று தெரிவித்தார்.

இதே வேளையில் ஒரு மாணவனின் தரத்திற்கும் பரீட்சை முடிவுக்கும் முரண்பாடு இருக்கும் பட்சத்தில் அவரது மூன்று தவணையின் போது கிடைக்கப்பெற்ற புள்ளிகளுடன் சேர்த்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் மறுபரிசீலனைக்காக ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் பரீட்சைக் கமிஷனர் கூறினார். இதுபோன்ற விண்ணப்பங்கள் இம்மாத முடிவுக்குள் கல்லூரி அதிபரினூடாக அனுப்பப்படவேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

### கலாச்சார அமைச்சர் இன்று வருகிறார்

(யாழ்ப்பாணம், வெள்ளி)

கலாச்சார மந்திரி திரு. எஸ். எஸ். குலதிலகா வடபகுதிக்கு 2 நாள் விஜயத்தை மேற்கொண்டு, இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றார்.

விமானத்திலவரும் அமைச்சருக்கு பலாலி விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்படும்.

இன்று காலை 10 மணிக்கு யாழ். அரசாங்க செயலகத்திக் நாவலர் கலாச்சார மண்டபம் தொடர்பாக நடைபெறும் மாநாட்டில் அமைச்சர் கலந்து கொள்வார். 11 மணிக்கு செயலகத்தில் யாழ். ஸ்ரீ நாகவிகாரை விஸ்தரிப்பு மாநாட்டில் கலந்து கொள்வார்.

பிற்பகல் 2 மணிக்கு காரைநகரில் இந்து கலாஷேத்திர அடிக்கல்லை நாட்டுவார். பிற்பகல் 5 மணிக்கு அரசினால் அமைக்கப்பட்ட சங்கானை கலாச்சார மண்டபத்தைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்னமும் 4 புசல் நெல் அல்லது 2 புசல் அரிசி வைத்திருக்கலாம்

### புதிய உத்தரவு எதுவும் இல்லை; சில வான்கள் மீது கண்காணிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனையிறவுத் தடைமுகாமினூடு நெல்லைக் கடத்தும் தனிப்பட்ட வான்களைக் கண்காணிக்கும்படி அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா உத்தரவிட்டுள்ளார்.

வட பகுதியிலுள்ள 37 தனிப்பட்ட வான்கள்பற்றிய விபரங்கள், ஆனையிறவு தடைமுகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வான்களில் கூடுதலாக பிரயாணிகளை ஏற்றுவதோடு, கூடுதலாக [illegible] களையும் ஏற்றிச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரந்தனிலிருந்து இயக்கச்சி வரையே இந்த தனிப்பட்ட வான்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தனிப்பட்ட [illegible] கூடுதலான சாமான்களை ஏற்றுதபடி கண்காணிக்குமாறும் அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

வட பகுதியிலுள்ள கள்ளச் சந்தைக்காரரும், வியாபாரிகளும் நெல்லைக் கடத்திச் சென்று யாழ்ப்பாணத்தில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதைத் தடுக்கும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் கூறினார்.

சிலதினங்களுக்கு முன்னர் ஒரு மோட்டார் வானில் 23 பிரயாணிகளும் 36 மூடை நெல்லும் இருந்தன. அந்த வானில் 14 பிரயாணிகளை மட்டுமே ஏற்றிச்செல்வதற்கு அனுமதியிருக்கிறது. நெல்மூடைகளின் உரிமையாளர்கள் பற்றிக் கேட்கப்பட்டபோது 17

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### தேவை
யாழ். நகரிலுள்ள விளையாட்டுப்பொருட் கொழிற்சாலைக்கு 22 வயதிற்குட்பட்ட J.S.C. சித்தியடைந்த 20 பயிற்சியாளர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும். பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், தையல் முத்துமாளிகை, 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 171

### இலவசம்
க.பொ.த. (சாதாரண/உயர் தரங்களுக்கு) வர்த்தகம், கலை, விஞ்ஞான பாடங்களைப் போதிக்கும் "நோ தேண் லேன்ஸ்" இன்ஸ்ரியூட்டார் வெண்டர்களை வழங்குகிறார்கள். முத்திரையிட்ட அஞ்சலுறையை 76, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவும். 194

### வைத்தியம்
ஹோமியோபதி-சகல நோய்களுக்கும் இலவச சிகிச்சை காலை 9-30 முதல் 12-30 வரை அளிக்கப்படுகிறது. ஹோமியோபதி ஆஸ்பத்திரி, 74, இவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

### கல்வி
யாழ்ப்பாணம் 426, கே. கே. எஸ். றோட்டிலுள்ள யாழ். நுண்கலைத் தொழிற்பாடசாலையில் இயந்திரவியல் மோட்டார் மெக்கானிஸம் 2 வருஷம், தையல் 1 வருஷம், நெசவு, இங்கு வகுப்புகள் நடத்தப்படும். சேர விரும்புவோர் 1-3-74 இக்கிடையில் விண்ணப்பிக்கவும். கௌரவ தலைவர் சிவ. உ. சோமசேகரம், கௌரவ காரியதரிசி, இ. சபாலிங்கம். 975

ஜி.சி.ஈ. 1974 ஆங்கில இலக்கியம். இலக்கணம் (Emma, English Poems, Macbeth, English Prose) ஆங்கிலப் பேச்சு (Spoken English) வீடுகளில் வந்து கற்றுக் கொடுக்கப்படும். இங்கிலிஷ் மோடையல் யூனிற். விலாசம் இல: 164 "ஈழநாடு" மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 164

ஒரே முறையில் விசேஷ சித்தி! கொக்குவில், வேதக் கோயில் ஒழுங்கை "இங்கிலிஷ் லியூரறி" இல் க. பொ. த. (சாதாரணதர) பரீட்சைக்கு ஆங்கிலம் தினசரி கற்பிக்கப்படும். 969

### கல்வி
நவீன முறையில் தையலும் சிகை அலங்காரமும் (Scientific Dress Making and Hair Style) பயிற்சிபெற்ற ஆசிரியர்களால் செய்முறைப் பயிற்சி விளக்கங்களுடன் நடைபெறும். விபரங்கட்கு தொடர்புகொள்ளவும்: 63, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 963

### விற்பனைக்கு
மோட்டார் உதிரிப்பாகங்கள் இப்போது எம்மிடம் கணிசமான விலைகளில் பல் வேறுவகைப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு உப உறுப்புகளும், உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 980

C. F. ஆஸ்டின் 12/4 மரபொடி வான் விற்பனைக்குண்டு. விபரம்: கயைர், 87/2, கன்றுகிட்டி வீதி, யாழ்ப்பாணம். 979

தராதரப்பத்திரமற்ற ஆங்கில ஆசிரியர் விண்ணப்பப் படிவம் ஆங்கிலத்தில் இப்போது கிடைக்கும் அரசாங்க வர்த்தமானியின்படி சரியான முறையில் அச்சிடப்பெற்றது. கணித, விஞ்ஞான ஆசிரியர் விண்ணப்பப்படிவமும் தமிழில் கிடைக்கும். விலை 75 சதம். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 976

ஒஸ்டின் ஏ. 40 (சி. எல். சீரிஸ்) வாகனம் விற்பனைக்குண்டு. கீழ்வரும் விலாசத்திற்குத் தொடர்புகொள்க. 106/5, ஜயவர்த்தன றோட், கொழும்பு 5. அல்லது சட்டத்துறை மாஅதிபதி திணைக்களம், கொழும்பு 12. 977

யாழ்ப்பாணம்-நாவலர் வீதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் வீடு கட்டுவதற்கேற்ற இரண்டு பரப்பு விஸ்தீரணமுள்ள கட்டிடத்துடன் கூடிய எட்டு காணித்துண்டுகள் நல்ல தண்ணீரும் மின்சாரமும் போக்குவரத்து வசதிகளும் உள. விபரங்களுக்கு: த. லாண்ட், இல்வெண்ட் மென்ஸ், 17, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 971

### விற்பனைக்கு
சிவராத்திரி புராணம் மூலமும் உரையும் 12 ரூபா 50 சதம். சிவராத்திரி மகிமை வசனம்: 1 ரூபா 50 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்— புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 959

FOR SALE
Motor Spares We have pleasure in announcing that we have now for sale a comprehensive stock of spares and accessories for various types of Motor Vehicles, at competitiveprices. THE JAFFNA CO-OPERATIVE STORES LTD. 420, Hospital Road, Jaffna. 981

## பிறந்தநாள் வாழ்த்து



அந்திரான், சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வன் ரமணன் விஜயரட்ணம் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (15-2-74) கொண்டாடுகிறார். இவரைப் பல்லாண்டு வாழ்க என அப்பா, அம்மா, மற்றும் உற்றார் உறவினர்களும் வாழ்த்துகின்றனர். 611

## கேள்விப்பத்திர விண்ணப்ப அறிவித்தல்

கீழ் குறிப்பிட்ட பொருட்களுக்கு முத்திரை இடப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் 25-2-74 வரை பெற்றுக்கொள்ளப்படும்.

750 கியூப் நிரப்பு மண்.

50 கியூப் பெரிய கல் (6"X4") விண்ணப்பப்பத்திரத்துடன் திருப்பி பெறக்கூடிய 100 ரூபா கட்டுப் பணமாகவும் 10 ரூபா மீளப் பெற முடியாத கட்டுப் பணமாகவும் கட்டவேண்டும். விபரங்களுக்கு கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்தல பொறுப்பதிகாரி,
கைத்தொழில் பேட்டை,
இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம்,
அச்சுவேலி.

615

போன்: 410. ஸ்தாபிதம்: 1939.
போட்டோ ஸ்ரட் (PHOTO STAT)
புளூ பிரின்ற் (BLUE PRINT)
5 நிமிடத்தில் பெற்றுக்கொள்ள
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.

## புத்தூர் கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

1974-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து 'சீல்' வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். வேலைகள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப்பிணைப்பணம் ரூபா 25/-ம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 15/-ம், செலுத்துவதன் பேரில் 1974-02-26-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிவரை என்னால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் தயாரிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. கிராமாட்சி மன்றங்களின் புதிய கணக்கீட்டு முறையின் பிரகாரம் செவ்வாய்க்கிழமைகளில் மட்டும்தான் பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். தேவையான மேலதிக விபரங்களை புத்தூர் கிராமாட்சி மன்றப் பணிமனையில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலைகளின் விபரம்

1. ஆவரங்கால் சந்தைக் கடைக் கட்டிடம் திருத்தவேலைகள் செய்தல்.
2. பெரியபொக்கனை வீதிக்கு இரண்டாம் முறை தார் ஊற்றல்.
3. முதலாம் வட்டாரம் காவலோடை ஒழுங்கை வேலை.

மு திருநாவுக்கரசு ஜே.பி.
தலைவர்.
புத்தூர் கிராமாட்சி மன்றம்.

கிராமாட்சி மன்றப் பணிமனை.
புத்தூர். 1974-02-11
618

# வடக்கில் யு. என். பி. கிளைகள் நிறுவ நடவடிக்கை

உடுப்பிட்டி, வியா. வடபகுதியில் ஐக்கிய தேசியக்கட்சிக் கிளைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னோடியாக ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகராக வழக்கறிஞரொருவரின் தலைமையில் கரவெட்டியில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை அழைத்து பகிரங்கக் கூட்டம் நடத்துவதென்றும், தெற்கே நடைபெறும் சத்தியாக்கிரகப் போல் வடக்கேயும் நடாத்துவது பற்றி ஆலோசிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

# இருபது வீதம் சம்பள உயர்வு வழங்கக் கோரிக்கை

பருத்தித்துறை, வியாழன் "வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளதாலும், போக்குவரத்து வசதிகள் மேலும்மேலும் மோசமடைந்து வருவதாலும் என்றுமேயில்லாதவாறு கஷ்டத்தைச் சாதாரண தொழிலாளர்களும், குறைந்த ஊதியம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், ஆசிரியர்கள் அனுபவிக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இவற்றினால் ஏற்பட்ட சுமையைச் சாதாரண மக்கள்மீது திணிப்பது பொருத்தமற்றதாகும். இதற்கு மாறாக இச்சுமையை இலங்கையில் வாழும் முதலாளிமார், தோட்டச் சொந்தக்காரர், நிலவுடைமையாளர் ஆகியோர் மீதே செலுத்தவேண்டும். அரசாங்கம் இதையுணர்ந்து செயற்படுவதுடன் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் இருபது வீதச் சம்பள உயர்வு வழங்க உடனே முன்வரவேண்டும். அத்துடன் சகல பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஒரே சம்பள விகிதம் என்ற திட்டத்தையும் அமுல்படுத்தக் கல்வியமைச்சு முன்வரவேண்டும்."

ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கத்தின் செயற் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5-2-74க்குப் பின் இடமாற்றம் எதுவுமில்லையென்ற தீர்மானத்தைக் கல்வியமைச்சு புனராலோசனைசெய்து விரைவில் இயலுமானவரை சகல ஆசிரியர்களுக்கும் தமக்குச் சொந்தப் பிரதேசங்களில் அல்லது இணைத்துத் தொடர்புள்ள இடங்களில் கடமையாற்றக்கூடியவாறு பாடசாலைகள் வழங்கப்படல் வேண்டுமென்றும், விசேடமாகப் பெண்களுக்கு இச்சலுகை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டுமெனக் கல்வியமைச்சைக் (7-ம் பக்கம் பார்க்க)

## கேள்விப் பத்திரம் வெற்றுச்சாக்கு

திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கத்தில் 5600 வெற்றுச் சாக்குகள்வரை விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 100/- கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 22-2-74 பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 23-2-74 நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. றெ. பி. பெஞ்சமின்,
பொதுமுகாமையாளர்,
திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கம்.

619

அபிஷேகத் திரவியங்கள்
சந்தனக்குழம்பு
(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை.)
0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்தபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்
வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்
0 "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
0 99 & 999 ஜவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்
விளைவு சூடம் சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான
சகல விதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)
53, கே.கே.எஸ்.றோட். யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7068
160, செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்: 35825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் சர்வதேச மகாநாடு

## விரைவில் நடாத்த வாஷிங்டனில் தீர்மானம்

(வாஷிங்டன், பெப். 14) உலக எண்ணெய் நெருக்கடி பற்றி ஆராய எண்ணெய் உற்பத்தி நாடுகளும் எண்ணெய் பாவனை நாடுகளும் சந்தித்துப் பேசவேண்டும் என்று வாஷிங்டனில் நடைபெற்ற பதின்மூன்று நாடுகளின் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தமகாநாட்டில்பிரான்ஸ் இளைய ஆட்சேபம் நிராகரிக்கப்பட்டது

எண்ணெய் பாவனை நாடுகளுக்கிடையிலும் எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கிடையிலுமான சர்வதேச மகாநாடு கூடிய விரைவில் நடைபெற வேண்டுமென்றும் வாஷிங்டன் மகாநாடு தீர்மானித்தது.

இந்த மகாநாட்டின் பின் பிரஞ்சு வெளிவிவகார அமைச்சர் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் வாஷிங்டன் மகாநாட்டில் அரசியல் விவாதமே அதிக இடம் பிடித்ததாகவும் பொருளாதார விவாதத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

### அல்ஜியர்ஸில் அரபு மகாநாடு

வாஷிங்டன் மகாநாடு முடிவடைந்த அதேசமயம் அல்ஜியர்ஸில் குட்டி அரபு உச்சி மகாநாடு ஆரம்பமானது.

எகிப்திய அதிபர் சதாத், அல்ஜீரிய அதிபர் போமிடியன், சவூதி அரேபிய மன்னர் பெய்சால் ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். அந்தரங்கமாக நடைபெற்ற இந்த மகாநாட்டில் பத்திரிகைப் படம்பிடிப்பாளர்களோ நிருபர்களோ சமீபத்தில் அனுமதிக்கப்படவில்லை.

## இந்தியாவுக்கு ஒரே கருத்தே!

புதுடில்லி, பெப். 12 இந்துசமுத்திரத்தில் வெளிநாட்டினர் ஆயுததளம் அமைப்பது பற்றி இந்தியா இரு முரண்பட்ட கொள்கைகளைக்கொண்டுள்ளது என்ற பிரிட்டனின் கூற்றை இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. சுவர்ண்சிங் மறுத்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் சோவியத்ரஷ்யா படைகளை நிறுத்தியபோது இந்தியா மௌனமாக இருந்துவிட்டு, இப்போது டியாகோ கார்ஸியாதீவில் அமெரிக்கா படைத்தளம் அமைப்பதற்கு ஆட்சேபனை கிளப்பியுள்ளது. இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையில் இரு முரண்பட்ட கருத்தைக்கொண்டுள்ளது என்பது இதிலிருந்து தெரிகிறது என்று பிரிட்டன் வெளிநாட்டு அமைச்சர் திரு. அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் அண்மையில் தெரிவித்தார்.

பிரிட்டனின் கூற்று அபத்தமானது என்று பாராளுமன்றத்தில் கூறிய திரு. சுவர்ண்சிங், இந்தியா தனது பிறநாட்டுக் கொள்கையில் என்றும் ஒரே கருத்தைக்கொண்டுள்ளது என்றும் ரஷ்யப் படைகள் இந்துசமுத்திரத்தில் நிறுத்தப்படுவதை கடந்த ஆண்டு இந்தியா வன்மையாக எதிர்த்துள்ளதாகவும் கூறினார்.

## விட்லம் நாடு திரும்பினார்

(கான்பரா, பெப். 14) தென்கிழக்காசியா தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஆஸ்திரேலிய பிரதமர் விட்லம் நேற்று கான்பரா வந்துசேர்ந்தார்.

## மார்க். கம். கட்சி எக்கட்சிக்கும் ஆதரவில்லை

(சென்னை, பெப். 13) கோயம்புத்தூர் மேற்கு சட்டசபைத் தொகுதியில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி எந்தக்கட்சிக்கும் ஆதரவளிக்காது என்று அக்கட்சியின் தலைவர் இல. எம். கல்யாணசுந்தரம் தெரிவித்தார். தமது கட்சியைச் சேர்ந்தவர்கள் தாம் விரும்பிய கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்கலாம் அல்லது வாக்களிக்காமலே இருந்துவிடலாம் என்று அவர் கூறினார்.

## ரயில் பாதையில் துண்டித்த நிலையில் கிடந்த சடலம்!

மீசாலை, வியாழன் உடல்வேறு கழுத்துவேறாக துண்டிக்கப்பட்ட நிலையில் புகையிரதப் பாதையில் நடுத்தரவயதுடைய ஒருவரின் சடலம் காணப்பட்டது.

நாவற்குளிக்கும் தச்சன்தோப்புக்குமிடையில் காணப்பட்ட இந்த சடலத்தின் கையில் கணையாளியும் கைமணிக்கூடும் காணப்பட்டதாகவும் பாதைக்கு வெளியே கால்கள் தெரிந்ததாகவும் சாவகச்சேரி பொலிஸாருக்கு செய்தி தெரிவிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டுள்ளனர். இவரிடம் புகையிரத பயணச் சீட்டும் காணப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## கத்தரிக்காயுடன் அகப்பட்டார்

உடுப்பிட்டி, வியா. அதிகாலைவேளையில்தோட்டமொன்றில் கத்தரிக்காயைக் களவாகப் பிடுங்கிக் கொண்டு கம்பிநீட்ட முயன்றவர் நெல்லியடிப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார். கரவெட்டிப் பகுதியிலுள்ள தோட்டமொன்றில் இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

## வல்லை இராணுவ முகாமில் அமோக விளைச்சல்

உடுப்பிட்டி, வியா. வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் சுமார் மூன்று ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கை அமோக வெற்றியீட்டித் தந்துள்ளது.

மேஜர் திரு நாணயக்காரா தலைமையில் மேற்கொண்ட உணவுற்பத்தியில் இராணுவ வீரர்கள் அமோக விளைச்சலைப் பெற்றுள்ளனர். தற்போது குரக்கன் சோளம், சோயா அவரை, பயறு, உழுந்து முதலியன அறுவடை செய்யப்பட்டுள்ளன

## விவசாய அமைச்சர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், வியா. யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும்விவசாய விஸ்தரிப்பு வேலைகளை நேரில் பார்வையிட காணி விவசாய அமைச்சர் ஹெக்டர் கொப்பேகடுவ இம் மாதம் 28-ந் திகதி இரண்டு நாள் விஜயமொன்றினை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகிறார்.

விவசாய விஸ்தரிப்பு பற்றி யாழ். அரசாங்கச் செயலகத்தில் நடைபெறும் விசேஷ மாநாட்டிலும் கலந்து கொள்ளும் அமைச்சர் யாழ் மாவட்டத்தில் புதிதாக ஆறு விவசாய சேவை நிலையங்களையும் திறந்து வைப்பார். (த)

## கைதான

# சோவியத் எழுத்தாளர் மேற்கு ஜெர்மன் சேர்ந்தார்

(பொன், பெப். 14) சோவியத்யூனியனின் பிரச்சனைக்குறிய எழுத்தாளரான அலக்சண்டர் சோல்ஸினிட்சன் மேற்குஜெர்மனி வந்துசேர்ந்துள்ளார்.

55 வயதான இவர் நேற்று முன்தினம் மாஸ்கோவில் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். அதன்பின்னர் அவர் நாடுகடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவரது மனைவியும் மூன்று பிள்ளைகளும் இன்னமும் மாஸ்கோவிலேயே இருப்பதாகத் தெரிகிறது. திரு. சோல்ஸினிட்சன் வெளிநாடுகளில் பிரயாணம் மேற்கொள்ளவிருக்கிறார் என்று சோவியத் அதிகாரிகள் மேற்குஜெர்மன் அரசுக்கு முதலில் அறிவித்திருந்தனர். அவர் மேற்கு ஜெர்மனிக்கு வருவதற்கு ஆட்சேபனையில்லையென்று அந்த அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து அவர் பொன் வந்துசேர்ந்துள்ள சோவியத் விமானம் ஒன்றில் வந்ததாகத் தெரிகிறது.

இவருக்கு 1970ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. சோவியத் கொள்கைகளைக் குறை கூறும்வகையில் இவர் எழுதிய கருத்துக்கள் காரணமாக சோவியத் அதிகாரிகளின் கோபத்துக்கு இவர் ஆளாகியிருந்தார்.

## பரீட்சைமுடிவினால்வாழ்வை முடித்தார்!

(யாழ்ப்பாணம், வெள்ளி) ஜீ.சி.ஈ. பரீட்சையில், சித்திபெறாத மாணவர் ஒருவர், அண்ணனுக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு, நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

ஆரியாலையைச் சேர்ந்த சுந்தரம் வெற்றிவேலு என்பவரின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது. யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. நடராசா மரண விசாரணை நடத்தினார்.

பரீட்சை முடிவுவந்தபின்னர் இவர் கவலையுடன் காணப்பட்டாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

பாக்கெட்டில் கண்டெடுக்கப்பட்ட கடிதமொன்றில், வாழ்க்கை வெறுத்துவிட்டதாகவும் வாழக்கொடுத்துவைக்க வேண்டுமென்றும், எவர்மீதும் சந்தேகிக்க வேண்டாமென்றும் எழுதியிருந்தார்.

விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## பங்களாதேஷ் அங்கீகாரம்

## பாகிஸ்தானை மீண்டும் கண்டிக்கிறார் சுவர்ண்சிங்

(புதுடில்லி, பெப். 14) பங்களாதேஷ் அரசை முறையாக இன்னமும் அங்கீகரிக்காமலிருப்பதற்காக பாகிஸ்தான் அரசை இந்தியா மீண்டும் கண்டித்திருக்கின்றது.

பங்களாதேஷ் அரசை பாகிஸ்தான் முறையாக அங்கீகரிக்காதவரையில் துணைக்கண்டத்தில் அமைதியிருக்க முடியாதென்று இந்திய வெளி உறவு அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் நேற்று கூறினார்.

பங்களாதேஷிற்கும் புறப்படுவதற்கு முன்னதாக அவர் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இக்கருத்தை வெளியிட்டார்.

துணைக்கண்டத்தில் அமைதி திரும்புவதை பாகிஸ்தான் தடை செய்துவருகின்றது என்று சர்தார் சுவர்ண்சிங் கண்டனம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் பங்களாதேஷ் பிரதம மந்திரி ஷேக் முஜிபுர் ரஹ்மான் இந்தியா வரும்போது இந்தியப் பிரதமருடன் நடத்தவிருக்கும் பேச்சுக்களுக்கான ஒழுங்குகளைச் செய்வதற்காகவும் சுவர்ண்சிங் டாக்காவுக்குச் சென்றுள்ளார்.

0 0 0

## லூர்த்துவிழா உற்சவம்

உடுப்பிட்டி, வியா. தும்பளை லூர்த்து மாதா ஆலய வருடாந்த உற்சவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 10-ம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும், 11-ம் திகதி காலை கூட்டுப் பூசையும் நடைபெற்றது. இவ்வுற்சவத்தில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். பருத்தித்துறை கத்தோலிக்க வாலிபர் கழகம் அனைவருக்கும் இலவசமாகத்தேநீர்வழங்கியது.

## "சமூக உயர்வு மக்களுக்கு அவசியம்" - சிவசிதம்பரம்

உடுப்பிட்டி, வியாழன்) "இலங்கையில் இராமப் புறத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் எதுவும் புரியாத சாதனையை இமையாணன் விளையாட்டுக்கழகம் (அறிவாலயம்) நிறுவியதன் மூலம் சாதித்துள்ளது. இது இப்பகுதி வாலிபர்களின் முன்மாதிரியாக விளங்குகின்றது".

முன்னாள் உபசபாநாயகரும், முன்னாள் உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் நிறுவப்பட்ட 'அறிவாலயம்' சனசமூக நிலையக் கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. அப்புக்குட்டி தலைமையில் இத் திறப்புவிழா நடைபெற்றது. திரு எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாட்டுமக்களிடம் சமூக உணர்வு கட்டாயம் வேண்டிய தொன்றாகும். இல்லாவிடின் எங்கும் ஒரே போட்டியும், பொறாமையும், பகைமையுமே மிஞ்சும். சமூகநல ஸ்தாபனங்கள் ஆற்றிவரும் அரிய பணிகள் மூலமே இன்று ஏழை மாணவர்கள் உயர்ந்த அந்தஸ்திற்கு வரமுடிந்தது. அரசியல் பொருளாதாரம், கலை, இலக்கியம் சம்பந்தமான கருத்தரங்குகளை நடாத்தி மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். இதனால் இளைஞர்கள் கூடுதலான பயனை அடையமுடியும். பட்டிமன்றங்களை நடாத்தி மக்களுக்குள்ள பிரச்னைகளில் தெளிவு பெறலாம். மேல்த்தரமான பத்திரிகைகள், சஞ்சிகைகளை ஒதுக்கித்தள்ள வேண்டும்". வேறு பலரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

0 0 0

# நீலகிரியில் பெரிய தேயிலைத் தோட்டம்!

## இலங்கையிலிருந்து திரும்புவோருக்காக!

(சென்னை, பெப். 14) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்திய இனத்தவர்களான தோட்டத் தொழிலாளருக்கு நீலகிரி மலைப் பிரதேசத்தில் 3750 ஏக்கர் நிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. ஏற்கனவே 1500ஏக்கரில் தோட்ட அமைப்பு வேலைகள் முடிவுற்றுள்ளன. 1978-ம் ஆண்டு வாக்கில் இங்கு தோட்டங்கள் அமைக்கும் வேலைகள் பூர்த்தியாகிவிடும்.

ஏற்கனவே இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்த 450 குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

1976-ம் ஆண்டுக்குள் இங்கு 80 லட்சம் ரூபாய் செலவில் 3 தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன. ரூபா 7 லட்சம் செலவில் தோட்டத் தொழிலாளர்களுக்கு [illegible] அமைக்கப்பட்டிருக்கின்றது.

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

ஒய்வு நேரமென்பது நீங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு, பிறரை வேலைசெய்யவிடாமல் அரட்டை அடிப்பதல்ல. — ஜப்பானியமொழி.


# ஈழநாடு

(15. 2. 74)


## நூற்றுக்கு ஒரு பேச்சு

பரிசளிப்பு விழாவென்ருல் பணக்கார வர்க்கத்தினர் ஆதரிக்கும் பிரபல கல்லூரிகளில் நடைபெறும் வைபவம் என்று பலர் கருதுவதுண்டு. அதில் முக்கிய இடம்பெறும் பிரதம விருந்தினரின் பேருரை வென்ருல், ஒரு பாதிரியாரின் போதனைபோலிருக்கும் என்பது இன்னொரு கருத்து. இவற்றில் உண்மையுண்டு.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டி திருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்புவிழா, இவ்விரண்டு கருத்துக்களுக்கும் விதிவிலக்கான நிகழ்ச்சியாகும். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோனே அதன் ரகசியமாகும்; அவருடைய பெருக்கேற்ப அவர் நிகழ்த்திய பேச்சு வீரப்பேச்சாகும். நாட்டின் புதிய நீதி நிர்வாகம் நேர்மையும் திடனமும் நிறைந்த ஒருவரின் தலைமையில் இயங்கி வருகிறதென்று நம்புவது தவருகாது.

'முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துகப் பெற்றியனே', என்று மணிவாசகர் இறைவனை உருவகப்படுத்தும் உணர்வு திரு. விக்டர் தென்னக்கோனின் அறிவுரையில் தெளிவுபெறுகின்றது. மாறுஞ் சமுதாயத்தில் கண்டி திருத்துவக்கல்லூரி போன்ற சிறந்தவக் கல்லூரிகள் பற்றிக் கவலை கொண்ட கல்லூரி அதிபருக்கு பிரதமநீதியரசர் அளித்த பதில், நாட்டின் தலைவர்கள் அனைவரும் படித்து உணரவேண்டியதொன்ருகும்.

புத்தபகவான் போதித்த பண்புகளில் சகிப்புத் தன்மை, கருணை, நீதியென்ற மூன்றும் சிறந்தவையாகும். இவற்றை நாம் சிரசிலும் இதயத்திலும் மேற்கொண்டாலொழிய, சமுதாயத்தை புத்தமத அடிப்படையில் கட்டி எழுப்புதல் இயலாத காரியமாகும். பிரித்ஒதுவதாலோ புத்தகுருமாருக்கு தேசிய வைபவங்களில் முதலிடம் கொடுப்பதாலோ விழாக்காலங்களில் குடை, கொடி பிடிப்பதாலோ மட்டும் புத்தமதத்தை வளர்க்கமுடியாதென்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர் நீதியரசர் திரு. தென்னக்கோன்.

102 வருடங்களாக நாட்டின் கல்விக்குச் சேவை புரியும் திருத்துவக்கல்லூரி இன்றையசூழ்நிலையில் எதற்கும் அஞ்சவேண்டியதில்லையென்ற நம்பிக்கை தெரிவித்த திரு. தென்னக்கோன் அதற்குரிய காரணத்தை ஓர் அரிய கருத்தைக்கொண்டு விளக்கியுள்ளார்.

நாட்டில் நிலவும் பசி, பற்ருக்குறை, வியோதி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்னைகளைத் தீர்ப்பதில் பாடசாலைகளும் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்பதை விளக்கத்தேவையில்லை. பட்டதாரிகளை உருவாக்கும் பணியில், கடந்தகாலத்தில் பெயரும் புகழும்பெற்ற திருத்துவக் கல்லூரி இன்று மாறுஞ் சூழலுக்கமைய, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செலுத்தி வெற்றிகண்டிருப்பதில் பிரதமவிருந்தினர் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிருர். எனவே அவர் விளக்கிய சிந்தனையின் சாரம் என்ன?

சகிப்பின்மை என்பது சமுதாயவாழ்வில் அஞ்சவேண்டிய நோய் பண்டமாகும். அது எவ்வாறு உற்பத்தியாகின்றது? அழகான விளக்கம் அளிக்கின்ருர் பிரதம நீதியரசர். பழமைஎன்பது நம் முன்னோரளித்த அருஞ்செல்வத்தைக் குறிக்கின்றது. பழமையைக் கட்டிக்காக்கும் மரபு அதற்கு வேறுபட்டது. மாறுஞ் சமுதாயத்தில் எவ்வகையிலும் பழமையைப் பேணும் மனோநிலை அழிவுக்கு இட்டுச் செல்லவல்லது. அந்த நிலையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் இயலாத காரியமாகிப் போய்விடும் என்பதே அவருடைய பேச்சின் சாரம்சமாகும். பழமையிலும், பழமையைப் பேணிக்காக்கும் மரபுக்கு முள்ள வேறுபாடு விளங்காததனாலேதான் சகிப்பின்மை உற்பத்தியாகின்றது.

கண்டி திருத்துவக்கல்லூரி ஒரு தனியார் பாடசாலை; பிரதமநீதியரசர் தெரிவித்த கருத்தின்படி, நாட்டின் தேசிய கல்வி ஸ்தாபனங்களில் இக் கல்லூரி ஒரு தக்க இடம் வகிக்கின்றது. தேசியஆக்க வேலைக்கு தக்கமுறையில் உதவும் ஸ்தாபனம் எதுவும் சகிப்பின்மைக்கு அஞ்ச வேண்டியதில்லையென்பதே அவருடைய பேருரையின் விளக்கமாகும்.

முற்போக்குவாதிகள் என்று முழங்கும் சிலர் இவ்வித ஸ்தாபனங்களையும், இவ்வித விழாக்களையும் கண்டிப்பதும் கேலி பண்ணுவதும் நியாயமற்றது என்ற முடிவை இந்த வைபவம் எடுத்துக்காட்டுகின்றது.

திறமைமிகுந்த மாணவர்களுக்கு பரிசளித்தல்பற்றி கருத்துவேறுபாடு இருக்கலாகாது. ஆனால் நூற்றுக் கோர் பேச்சு நிகழ்த்தவல்ல பெரியாரை பேசஅழைக்கும் வழக்கம் நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் பரவவேண்டியதை இந்நிகழ்ச்சி திருபிக்கின்றது.

## அறுவடைக்குப் போனவர் ரயிலுக்குப் பலி

மீசாலை, வியாழன்

இரு பெண்பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவர் ரயிலுக்குப் பலியானுர்.

மீசாலையைச் சேர்ந்த இளைய தம்பி கந்தையா என்பவர் நான் மேற்படி பரிதாபச் சம்பவத்துக்காளானவர்.

தச்சன்தோப்பில் இச்சம்பவம் நடைபெற்றது. நெல் அறுவடைசெய்யப்போன சமயம் புகையிரதப் பாதையைக் கடக்கும்பொழுது ரயிலால் அடிபட்டு மரணமானதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.

மரண விசாரணை [illegible] விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஹுருளுவெவ மக்களுக்கு

# வாழ்வளிக்கும் மகாவலியின் தண்ணீர்!

ஹுருளுவெவவுக்கு மகாவலி நீரைக் கொண்டுசெல்லும் 38 மைல் நீளமான போவதென்னை ஹுருளுவெவ கால்வாய்த்திட்டத்தை இன்று (15-2-74 நீர்ப்பாசன மின்சக்தி-நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்க சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கின்ருர். 20 ஆண்டுகளுக்கு மேலாக நீர்ப்பாசனக் கஷ்டங்களுக்குள்ளாகிவரும் ஹுருளுவெவ குடியேற்ற வாசிகளுக்கு இதனுல் பெரும்பயன் ஏற்படும் என்று கருதப்படுகின்றது. இத்திட்டம்பற்றி திரு. மைத்திரிபால சேனநாயக்க எழுதியுள்ள கட்டுரை இங்கு தரப்படுகின்றது.



**மைத்திரிபால சேனநாயக்கா**

நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர்

பயணம்செய்த ஹுருளுவெவ குடியேற்றவாசிகளின் கஷ்டங்களை அறிந்துகொள்ளும்படி 1959ம் ஆண்டு நான் கேட்டுக்கொண்டேன்.

மரணமாவதற்கு 10 தினங்களுக்குமுன்பதாக 1959 செப்டம்பர் மாதத்தில் அங்கு அவர் விஜயம்செய்தார். அந்த மக்களின் கஷ்டங்களைக் களைய வேண்டும் என்பதில் அவருக்கு பெரிதும் அக்கறை ஏற்பட்டிருந்தது.

ஹுருளுவெவ உட்படவடமத்திய மாகாணத்தில் உள்ள குளங்களுக்கு மகாவலி கங்கையில் இருந்து நீர்ப்பாய்ச்சும் சாத்தியம்பற்றி 1959ல் ஓர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய அமெரிக்கச் செயல் மிஷனும் நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைந்து சில சிபார்சுகளைச் செய்தன. கொத்மலி ஓயாவில் நீர்ப்பாசனக் குளம் ஒன்றை அமைத்தல், பேராதனைக்கு அருகில் பீலிரோல் இடையில் மகாவலிகங்கையில் குறுக்கு அணை கட்டுதல், சுதுகங்கைக்கு நீர்ப்பாய்ச்சக் கூடியதாக அம்பத்தன்னைக்கு அருகில் இரண்டு மைல் சுரங்கம் அமைத்தல், நிகலையிலிருந்து கெம்பிட்டி கொலேயிற்கு 124 மைல் நீளமான கால்வாய் அமைத்தல் ஆகிய சிபார்சுகளும் இதில் அடங்கியிருந்தன.

அதிகரித்திருப்பதையும் பழைய யோதனில் மேலதிகமாக கால்வாய் ஒன்றை அமைப்பதால் ஹுருளுவெவவிற்கு நீர் பாய்ச்ச முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர். அத்தகைய ஹுருளுவெவவிற்கு நீர்ப்பாய்ச்சும் திட்டத்தைத் தயாரிக்குமாறு நான் 1972ன் முற்பகுதியில் மகாவலி அபிவிருத்தி சபையைப் பணித்திருந்தேன்.

எட்டு மாதகாலத்திற்குள் வேலையை ஆரம்பிக்கத்தக்கதாக ஒழுங்குகளை மேற்கொண்ட எஞ்சினியர்கள் பாராட்டிற்குரியவர்களாவர்.

1975-76 பெரும்போகப் பருவத்தின்போது நீர் வழங்கத்தக்கதாக இந்த வேலைகள் 1975ன் இறுதியில் பூரணமாக முடிவுபெற்றுவிடும்.

### விவசாயச் செய்கை

இந்த ஹுருளுவெவ திட்டத்தின் கீழ்வரும் 30 வீதப் பகுதியில் உள்ள மண்வளம் வேர்க்கடலை, சோயா அவரை, வெங்காயம், மிளகாய் ஆகியவற்றைப் பயிரிட வாய்ப்பானதாகும். இந்த அம்சத்தையும் கருத்திற்கொண்டு ஹுருளுவெவ நிலத்தில் நல்ல விவசாயச் செய்கையை மேற்கொள்ளத்தக்க அமைப்பு முறையைத் தயாரிக்குமாறும் நான் மகாவலி அபிவிருத்திச் சபையைக் கேட்டிருக்கிறேன்.

மகாவலிகங்கை நீர் எல்லையின் திசை திருப்புவதற்குப் பெருந்தொகைப் பணம் செலவாகும். ஹுருளுவெவவிற்கு நீர் பாய்ச்சுவதற்கு மேலதிகக் கால்வாய்களை அமைக்க ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாய் செலவாகும். இத்தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக உபயோகிப்பது அவர்களின் முக்கிய கடமையாகும். இத்திட்டத்திற்குப் பொறுப்பாயுள்ள அதிகாரிகள், விவசாயிகள் தண்ணீரைச் சிக்கனமாக உபயோகிக்கின்றனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவர்களது பெருங் கடமையாகும்.

புராதன சிங்களமக்கள் பிரதானமாக வரண்ட பிரதேசங்களிலேயே வாழ்ந்தார்கள். பொறியியல் நிபுணர்களாக விளங்கிய அன்றைய அரசர்கள் இப்பிரதேசங்களில் உணவுப் பொருட்களை பயிர்செய்வதற்காக நீர்ப்பாசன அமைப்புக்களை நிர்மாணித்தார்கள்.

3-வது நூற்றுண்டில் இலங்கையை ஆட்சிபுரிந்த மஹாசேனன் 16 குளங்களைக்கட்டினுன்.

அரிசி உற்பத்தி பண்டைய நாகரீகத்தை மீண்டும்மறுமலர்ச்சிகொள்ளச் செய்தல், குடிசனம் மிகுந்துள்ள தென்மேற்குப் பிரதேசத்தில் காணியற்றிருக்கும் மக்களைக் குடியேற்றுவதுபோன்ற மூன்று நோக்கங்களையும் கருத்திற்கொண்டு இலங்கை ஓரளவு சுதந்திரமடைந்திருந்தபோது பதவிக்கு வந்த முதலாவது அரசாங்கம் பண்டையநீர்ப்பாசன அமைப்புக்களை சீர்அமைப்புசெய்ய முடிவுசெய்தது. இதன்படி மத்திய மாகாணத்தில் மினிப்பையிலிருந்து வடமத்திய மாகாணத்தில் பதவியாவரையிலான நீர்ப்பாசன வசதிகளை சீர்செய்வதில் அரசு ஈடுபட்டது.

ஹுருளுவெவ புனர்நிர்மாணவேலைகள் 1949ம் ஆண்டு ஆரம்பமாயிற்று இந்நீர்த்தேக்கத்தில் 1953ம் ஆண்டு தண்ணீர் சேகரிக்கப்பட்டது.

ஒருபெரும்போகத்திற்கு இருகால்வாய்கள் மூலம் 10,000 ஏக்கர் பிரதேசத்தில் நீர்ப்பாசனம் செய்யமுடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நீர்த்தேக்கம் புனரமைப்பு செய்த காலத்திலிருந்து அதில் தண்ணீர் நிறையவுமில்லை, அதனும் 10,000 ஏக்கருக்கும் நீர்ப்பாசனம் அமைக்கமுடியாது என்பதும் தெரியவந்தது. இதற்கு உபதிட்டங்களான அருத்திவெவ, கிவுலகட நீர்த்தேக்கத்திட்டங்களையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. என்ருலும் குடியேற்ற வாசிகள் தொடர்ந்தும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். [illegible] டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவை இப்பகுதிக்கு விஜ

ட்டத்தட்ட 1,00,000 ஏக்கர் நிலத்திற்கு நன்மை விளைவிக்கக்கூடிய ஹுருளுவெவ உட்பட வடமத்திய மாகாணத்தில் உள்ள சகலபெரிய நீர்ப்பாசனக் குளங்களும் இச்சிபார்சுகளால் பலன்பெறவிருந்தன. மேலும் 1,15,000 ஏக்கர் புதுநிலம் இச்சிபார்சால் பயிர்ச்செய்கைக்குள் வரவிருந்தது. 2,60,000 கிலோவாற் இயலளவு கொண்ட மின்சக்தி நிலையங்கள் அமைப்பது பற்றியும் சிபார்சுகள் அமைந்திருந்தன.

இச் சிபார்சுகள் 1962-ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. காலஞ் சென்ற திரு. டட்லி சேனநாயக்கா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோர்தெரிவித்தஅபிப்பிராயம் காரணமாக அப்போதிருந்த நீர்ப்பாசன அமைச்சர் இதுபற்றி மேலும் ஆராய முடிவு செய்தார். மகாவலிகங்கையையும் அதனை அடுத்துள்ள வடிநிலங்களையும் ஆராய யூ. என். டி. பி. கோஷ்டி ஒன்று வரவழைக்கப்பட்டது. இக் கோஷ்டி பெரும் அபிவிருத்தித் திட்டம் ஒன்றினையும்சாத்தியமான அறிக்கை ஒன்றினையும் 1968-ல் சமர்ப்பித்தது.

### மேலதிக நீர் வசதி

இப்போது அமுல் நடத்தப்படும் இத்திட்டத்தின் மூலம், மகாவலிகங்கை அபிவிருத்தித்திட்டத்தின் 8-ம் கட்டத்தில் ஹுருளுவெவவிற்கு மேலதிகமாகத் தண்ணீர் வழங்கப்படும். இம் மூன்றும் கட்டத்தினை அடைய இன்னும்நீண்டகாலம் எடுக்குமாதலால் அதுவரை ஹுருளுவெவ பிரச்சினையை ஆறப்போட முடியாது எனக் கருதிய நான் பொறியியலாளர்களிடம் போவத்தென்ன வேலைகள் முற்றுப் பெற்றதுமே ஹுருளுவெவவிற்குத் தண்ணீர் வழங்க முடியாதாஎன்று மகாவலிஅபிவிருத்தி சபையை விசாரித்தேன் யு. என். டி. பி. சிபார்சு செய்த போவத்தென்ன சுரங்கத்தின் இயலளவான 700 கியூசெக்ஸைத் தாங்கள் 1,000 கியூசெக்ஸாக

## பஸ் கட்டணத்தை மறுபரிசிலனை செய்க

(தேவிபுரம், வியாழன்)

இன்றைய பொருளாதார நெருக்கடியில் விவசாயியே மிகவும் பாதிக்கப்படுகிருன். இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் பட்டணத்தை இருமடங்குக்குச் சமமாக கூட்டியிருக்கிறது. முன்னர் பஸ் தேசியமயம் மக்களால் போற்றப்பட்டது. தேசியமயத்தின்பின் பஸ் சேவை சிராகும் எனப்பலர் எதிர்பார்த்தனர். எதுவுமே புதிதாக நடக்கவில்லை. புதிய பாதைகளில் பஸ் வண்டிகள் சேவைக்கு விடப்பட்டபோது ரூட்டுக்கள் சரியில்லை எனக்கூறி அரசினர் கூடுதல் கட்டணம் அறவிட்டனர். பின்பு வீதிகள் செப்பனிடப்பட்டபோதும் கட்டணங்களைக் குறைக்கமுன்வரவில்லை. இப்பொழுது எரிபொருளின் விலைஉயர்வைச் சாட்டாக வைத்துக்கொண்டு பஸ்கட்டணத்தை இருமடங்காக்கியது மிகவும் அநீதியாகும்.

எனவே தினசரி மக்களை பாதிக்கும் பஸ்ஸின் கட்டணத்தை மறுபரிசீலனை செய்தல் அவசியமாவதுடன், குறைக்கவேண்டியதும் கட்டாயமாகிறது.

மேற்கண்டவாறு சவலை தெரிவித்துள்ளது தேவிபுரம் அபிவிருத்திமன்றம். இது சம்பந்தமான கடிதமொன்றையும் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமக்கள் குழு விசாரணை

# "350 ஆண்டுகளுக்குப்பின் தமிழ் உலக அரங்கிற்கு வந்துள்ளது"

## திரு. தம்பித்துரை தொகுப்புரை

யாழ்ப்பாணம், வெள்ளி

"பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி நடத்தப்படும் எந்த மகாநாடும் வெற்றிபெற முடியாது. தோல்வியிலேயே முடியும். எனவே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடும் பண்டாரநாயகா ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தப்பட்டிருப்பின் தோல்வியில்தான் முடிந்திருக்கும்."

நேற்றுமுன்தினம் சென்ற மாதம் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதசம்பவம் தொடர்பாக பொதுமக்கள் விசாரணைக்குழு முன்பொதுமக்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் முடிவுற்றதனைத் தொடர்ந்து சாட்சிகளை ஆஜர் செய்து அவர்களின் நலனைக் கவனித்துவந்த முன்னாள் நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை, தமது தொகுப்புரையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தம்பித்துரை தமது தொகுப்புரையில் தொடர்ந்து கூறியதாவது:

"தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரை 1974-ம் ஆண்டு மறக்கமுடியாத வருடமாகும். தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுமா என பல காலம் சந்தேகங்களும் ஐயங்களும் பீடித்திருந்த பின்பாடே மகாநாடு நடைபெற்றது

**அரசியல் எதிரொலி**

அரசியல் எதிரொலி ஒன்று எழுந்தபடியால் யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது எனவும் வற்புறுத்தப்பட்டது. கொழும்பிலேயே நடத்தப்படவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. காரணமாக தமிழர்கள்மத்தியில் "யாழ்ப்பாணத்திலேயே அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு நடத்தப்படவேண்டும் என்ற எண்ணமும் அவாவும் உணர்வு பூர்வமாக எழுந்தது. கொழும்பில் நடத்த அவர்கள் விருப்பமற்றவர்களாகக் காணப்பட்டனர்.

"மக்களின் ஒத்துழைப்பு இன்றி நடாத்தப்படும் எவ்வித மகாநாடும் வெற்றிபெற முடியாது. அவை தோல்வியிலேயே முடிவடையும். எனவே கொழும்பிலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை எப்படி வெற்றிகரமாக நடத்தமுடியும்?"

உறங்கு நிலையிலிருந்த தமிழ் 350 ஆண்டுகளுக்குப் பிற்பாடு இன்றுதான் சர்வதேச அரங்கிற்கு வந்துள்ளது. இப்போதுதான் சர்வதேச மதிப்பையும் மரியாதையையும் பெற்றுவருகிறது.

அனைத்துலகத்தமிழாராய்ச்சி மகாநாடு இலங்கையில் நடத்தப்படவுள்ளபோது யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவும் அனுமதிக்கப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டாலும் பின்பு மறுக்கப்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாநாட்டை நடத்தஅனுமதி பின்பு மறுக்கப்பட்டதன் காரணமாக "றிமர்" மண்டபத்தில் வைக்கவேண்டும்என்ற தேவை ஏற்பட்டது. எனவே 'றிம்மர்' மண்டபம் ஒழுங்கு செய்யப்பட்டது.

அனைத்துலகத்தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறவுள்ள தினத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக அதாவது மூன்று நான்கு தினங்களுக்கு முன்பாகவே வீரசிங்கம்மண்டபத்தில் மகாநாட்டைநடத்தத் திரும்பவும் அனுமதி தரப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடத்தப்பட வேண்டும் என்ற பிரச்னை வலுப்பெற எழுந்ததற்கு பிரதானமாக உள்ள பிரச்னை மொழிஉரிமைப் பிரச்னையாகவும், தமிழ்மொழியைப் பேணிப் பாதுகாக்கும் பிரச்னையுமாகும்.

"யாழ்ப்பாணத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்துவதற்கு நீர், மின்சார, இடவசதிகள் எதுவாக இருப்பினும் தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாக்க தமிழர்கள் அதிகமாக வாழும் தமிழ்ப் பிரதேசத்திலேயே மாநாடு நடத்தப்படுதல் உசிதமானது.

"இப்படியாக அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு இறுதியில்யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அமைப்பாளர்கள் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளனர். அதைப் பொறுத்தவரை எதுவித அதிருப்தியும் இல்லை. அமைப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு முறைகள் எல்லோரையும் திருப்திபடையச் செய்துள்ளது.

"நிகழ்ச்சி நிரல்கள் எல்லாவற்றிலும் தமிழ்க் கலாச்சார, மொழி விடயங்கள் மிகச் செறிந்திருந்தன. இதனைத் தமிழ் மக்கள் கண்டபொழுது தமிழ் முக்கியத்துவமான அந்தஸ்தில் இருப்பதை உணர்ந்தனர். எல்லோரும் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தனர்.

"கடந்த மாதம் 10-ம் திகதி எதுவித கலை நிகழ்ச்சிகளும் ஆரம்ப நிகழ்ச்சி நிரலில் ஒழுங்குசெய்யப்படவில்லை. பொதுமக்களின் விருப்பத்தின் வேண்டுகோளுக்கு ஏற்பவே 10-ம் திகதிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்படியாக செய்திப் பத்திரிகைகளில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளான பத்தாந் திகதி ஏதாவது ஒரு சிறிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுமெனச் செய்திகள் வெளிவந்தன. 10-ந் திகதிய நிகழ்ச்சி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கல்விமான்களைக் கௌரவிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டன.

"அனுமதி பெறப்பட்டிருந்த பொழுதிலும் அன்றையதினம் திறந்தவெளியரங்கு பூட்டப்பட்டிருந்தது. அங்கு முன்னைய தின நிகழ்ச்சிகளுக்காக பொருத்தப்பட்ட மின்சார விளக்குகள், ஒலிபெருக்கிகள் நீக்கப்படவில்லை. பாலேந்திரா, வி. எஸ். துரைராஜா ஆகியோரின் சாட்சியங்களிலிருந்து எப்படித் திறந்தவெளி அரங்கில் மாநாட்டு இறுதி நிகழ்ச்சி சடுதியாக நடத்த முடியவில்லை என்பது தெளிவாகிறது.

தலைவர்: முதல் நாள் மழை பெய்ததால் 10-வது தின விழாவைத் திறந்தவெளியரங்கில் நடத்தப்படவில்லையென ஏதனவே சாட்சியத்தில் கூறப்பட்டுள்ளதே?- துரைராஜாவின் சாட்சியத்தின்படி திறந்த வெளியரங்கு பெறக்கூடியதாக இருந்தது; ஆனால் பூட்டப்பட்டிருந்தது.

தலைவர்: மாநாட்டு அமைப்பாளர்கள் சனக் கூட்டத்தை மதிப்பிடத் தவறிவிட்டார்கள் எனவே அது ஒரு தவறுதானே?- அன்றைய தினம் ஒரு விசேஷ தினமாகும். எனவே பெருந்தொகையான ஜனக் கூட்டம் திரண்டுவிட்டது. (ந)

---

யாழ் நகர்ச் சம்பவம்:

## "யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்"

கொழும்பு, வியாழன்

"யாழ் நகரில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதி நாளன்று ஒன்றுமறியாத அப்பாவி மக்களே உயிரிழந்துள்ளனர். அவர்கள் தமிழர்களாக மட்டுமல்ல எவ்வின த்தவராக இருந்தாலும் சிங்களமக்களாகிய நாம் பெரிதும் கவலையடைகிறோம். மனிதன் இன, மத, மொழிகளுக்கு அப்பாற்பட்டவன். அவனது உரிமைக்கு, உயிருக்கு எந்த இடர் நேரிடினும் குரல் கொடுக்கவேண்டியது எமது கடன். எனவே அப்பாவி மக்களின் உயிரை அநியாயமாகப் பறித்து அதன் மூலம் இலாபம் தேடமுயன்றவர்கள் யாராயிருந்தாலும் தண்டிக்கப்படவேண்டியது அவசியம்"

இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிரிழந்தோருக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நடாத்திய கூட்டமொன்றில் கலந்துரையாற்றிய பல்கலைக்கழக தேசிய மாணவர் சங்க செயலாளர் திரு. ஐ. ஜி. ஜி. அபயசேகரா கூறினார்.

அவர்மேலும் பேசுகையில்: "மேற்படி சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டுமெனவும் இனிமேலும் இப்படியான அப்பாவி மக்கள் பலிபோகும் நிலை இடம்பெற அனுமதிக்க முடியாது" என்றும் கூறினார்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் திரு. சு. வித்தியானந்தன் பேசுகையில் "தமிழின் பெருமையை உலகறியச்செய்ய எடுத்த விழாவில் கறைபடிந்தவரலாறு ஒன்று இடம்பெற்று விட்டதாகவும் அன்று உயிரிழந்தோருக்கு அனுதாபம் தெரிக்கும் இவ்வேளையில் இக்கூட்டத்தில் சிங்கள இளம் கலைஞர்களும் சேர்ந்து அனுதாபம் தெரிவிப்பது மகிழ்ச்சி தருவதாகவு கூறினார்.

இதைதொடர்ந்து தேசிய மாணவர் சங்க பிரதிநிதி திரு ஞானம், தமிழ்ச்சங்க தலைவர் முதலியோரும் உரையாற்றினார்கள்.

இறுதியில் உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிரிழந்தோருக்கு அனுதாபம்தெரிவித்ததுடன், இதுகுறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதமர் தபாலமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்குத் [illegible] தெனவும் முடிவு [illegible] டது.

---

## பொலிஸ் உடையில் நகைத் திருட்டு

புத்தளம், வியாழன்

அரிசிப் பதுக்கலை ஒழிக்க வந்ததாகக்கூறிய பொலிஸ் உடை தரித்த அறுவர் சுமார் 5,000 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச்சென்ற சம்பவமொன்றால் பரபரப்படைந்துள்ளனர் புத்தளம் மக்கள். இவர்களது இந்தத் திருவிளையாடல் புத்தளம் பகுதியில் பல இடங்களிலும் நடைபெற்றதாயினும் ஒரு வீட்டில் மட்டுமே களவாடமுடிந்ததாம்

---

## புதிதாக 2 வழக்குகள்

(யாழ்ப்பாணம், வெள்ளி)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், நேற்றுக்காலை நீதவான் சி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் கூடியபோது புதிதாக இருவழக்கு விசாரணைக்காக சேர்க்கப்பட்டது.

இவ்வழக்கில் எதிரி பக்க சார்பில், அரசாங்கத்தால் சட்டத்தரணி நியமிக்கப்பட்டார். விசாரணை இம்மாதம் 18ம் தேதி காலைவரை ஒத்திப் போடப்பட்டது. [ஈ]

---

## தொழிற்சங்கங்கள் கூட்டுச்சபை தீர்மானம்

(யாழ்ப்பாணம், வெள்ளி)

வாழ்க்கைச்செலவு, பஸ், ரயில் கட்டண உயர்வு ஆகியவற்றை மனதிற் கொண்டு அரசாங்கம் உடனடியாக தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டும் என வற்புறுத்துவதென வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுச்சபை தீர்மானித்துள்ளது. இதை அடிப்படையாகக்கொண்டு ஏற்கனவே பிரதம மந்திரியிடம் கையளித்துள்ள 28 கோரிக்கைகள் விசேடமாக கேட்கும் 20 வீத சம்பள உயர்வு முதலானதற்றைப் [illegible] வேண்டும் எனவும் காலவரையற்ற [illegible] எஸ். பீ. டீ. [illegible].

கவினுன் அறிக்கையை வெளியிட்டு அமுல் நடாத்தவேண்டுமெனவும் கோரி தொழிற்சங்கங்களின் செயற்குழு கேட்டுக்கொண்டது. அத்துடன் பொதுக் கூட்டமொன்றில் தொழிலாளரின் கோரிக்கைளை வற்புறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

நாவாந்துறையில்

## நிலமற்றவர்களுக்கு 200 ஏக்கர் நிலம்!

மீசாலை, வியாழன்

நாவாந்துறையில் நிலமற்றவர்களுக்கென வழங்குவதற்கு 200 பரப்பு நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வண. மேதகு இராமசேவகர் திரு. தா. வேயாதசுந்தரம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

நாவாந்துறையில் அராலி ரோட்டில் 200 பரப்பு தகிக நிலத்தை தெரிவு செய்து, அதை நிலமற்ற மக்களுக்கு வழங்குமாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஸி. எக்ஸ். மார்ட்டினை, மேற்படி கிராம சேவையாளர் கோரியுள்ளார்.

யாழ். எம். பி. இது சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

---

விருந்தினர் விடுதி

## ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்க உத்தரவு

(யாழ்ப்பாணம், வெள்ளி)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல விருந்தினர் விடுதி ஒன்றில் இருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட ரத்தினம் என்பவருக்கு உடனடியாக வேலை கொடுக்கும்படியும், பாக்கிச் சம்பளம் வழங்கும்படியும் யாழ். நீதவான் திரு. கே. பாலகிட்ணர் நேற்று உத்தரவிட்டார்.

ரத்தினம் என்ற ஊழியர் வேலைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் தொழில் நீதிமன்றத்துக்கு மனுச் செய்திருந்தார். அந்த மனு மீது விசாரணை நடந்து அவருக்கு மீண்டும் வேலை வழங்கும்படி தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் அந்தத் தனியார் ஸ்தாபன உரிமையாளர் அந்த ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்க மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஊழியரான ரத்தினம் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். இவ்வழக்கு நேற்றுக் காலை விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஊழியரான ரத்தினம் சார்பில் சட்டத்தரணிகளான இ. ஆறுமுகம், சிவகணேசன் ஆகியோரும், ஸ்தாபன உரிமையாளர் சார்பில் சட்டத்தரணிகளான திரு. அம்பிரட் துரையப்பா, வி. நடராசா ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

தீர்ப்பு வழங்கப்பட்ட பின் ஊழியரான ரத்தினத்தை லங்கா தொழிற்சங்க சம்மேளனம் சார்பில் யாழ். பிரதேசச் செயலாளர் திரு எஸ். நடராசா, அமைப்பாளர் எஸ். விஜயானந்தன் ஆகியோர் உதவித்தொழில் ஆணையாளரிடம் அழைத்துச் சென்று அவர் வேலை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்தனர். (ஈ)

---

## மக்கள்கழகம் கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பொலிசார் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலைக் கண்டிப்பதுடன் இதையிட்டு பாரபட்சமற்ற விசாரணைக்குழு வொன்றை நியமிக்குமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்வதென்றும் மானிப்பாய் மக்கள் கலாசார முன்னேற்றக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மானிப்பாய் 'சிற்சி' மண்டபத்தில் திரு. இரா. பாலசந்திரன் தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தீர்மானத்தை

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த லட்சியங்கள் கொண்ட ஈழத்துவாலிபர்கள்

## பாப்பரசரின் பிரதிநிதி பாராட்டு

(பண்டத்தரிப்பு, புதன்)

''இலங்கை மிகவும் அழகிய நாடு இந்த நாட்டில் சிலநாட்கள் மட்டுமே தங்கியிருந்தாலும் அதற்கிடையில் இலங்கையிலுள்ள வாலிபர்களில் அநேகர் உயர்ந்த இலட்சியங்களுக்காக நல்ல முயற்சிப்பம் ஈடுகொண்டிருப்பதைக் கண்டு மிக மகிழ்ச்சியடைகிறேன்.''

யாழ்ப்பாணத்திலுள்ள பல கோவில்களைத் தரிசிக்கச் சுற்றுலா மேற்கொண்டு இங்கு வந்திருந்த பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி மேதகு கார்லோ கூரிஸ் இளவாலை திருக்குடும்பக்கன்னியர் மடப் பாடசாலையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி, பண்டத்தரிப்பு குருமார் ஞானஒடுக்க இல்லம் ஆகியவற்றைத் தரிசித்த பாப்பரசரின்பிரதிநிதி மேலும் தொடர்ந்து கூறியதாவது:

''நான் இளைஞனாக இருந்தபோது வாலிபரின் இயக்கங்களில் சேர்ந்து மிக உயர்ந்த நோக்கங்களுக்காக உழைத்தேன். குருவானபின்னர் வாலிபர் இயக்கங்களைப் பராமரித்தேன். இன்று இலங்கையில் நல்ல இலட்சியங்களுக்காக வாலிபர்கள் முயற்சிப்பதைக் காண பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுகிறேன்.



மாணவிகளும் கடவுளுடைய நல்ல நோக்கங்களை மனதிற் கொண்டு அவற்றிற்காக கற்கும் காலத்தில் முழுமனதுடன் முயற்சியுங்கள். யேசுக்கிறிஸ்துவினதும் அவருடைய அன்பான தாயினதும் உதவி என்றும் எமக்குக்கிடைக்கும். இந்த ஆசியை விரும்பி பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தொலிக்கு ஆசிர்வாதத்தை உங்களுக்கு அளிக்கிறேன்.''

மாதகல், சில்லாலை முதலிய இடங்களைத் தரிசித்த மேதகு கார்லோ கூரிஸ் இளவாலையில் புனித என்றியரசர்கல்லூரியில் யேசுவின் சுருபத்தை நவமாக தாபித்து அதனை ஆசிர்வதித்தார். ஆசிரியர்கள் மாணவர்கள் அவரை வரவேற்று உபசரித்தனர்.

பிற்பகல் சுற்றிலாவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பொன் மகளிர் கல்லூரி, புங்குடுதீவு பங்குக்கோவில் முதலிய இடங்களைத் தரிசித்தார். நாளை கொழும்பு திரும்பும் வழியில் கிளிநொச்சி லோங் கைத்தொழிற் பயிற்சிச்சாலை''யையும் தரிசிப்பார்.

மேதகு கார்ல்லோவுடன் அவரது பிரத்தியேக காரியதரிசி வண. ஒஸ்வால்ட்படில்லியாவும் கொவந். வ. தியோகுப்பிள்ளை மேற்றிராணியார் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளுக்கு சென்றனர். (ஈ)

### இன்றைய பலன்

மாசி மீ 3-ந் திகதி (15-2-74)

**மேஷம்:** கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும் எதிரிகள் காத்திருப்பர் ஆயுதபீடைக்கும் இடமுண்டு.

**ரிஷபம்:** இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். ஸ்திரவழியாக் பொருள் வரவுக்கும் இடம் உண்டு.

**மிதுனம்:** புதிய தலையிடி தலைதூக்கும். வாழ்க்கையின்று சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருந்தல் நன்று.

**கடகம்:** காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும் எதிர்பார்த்தவரவினும்திருப்தி ஏற்படும்.

**சிம்மம்:** தொழில் துறையில் முன்னேற்றம் தொடர்ந்து வரும் புகழ் நிதியில் அபிவிருத்தி நிம்மதிபிறக்கும்.

**கன்னி:** வியாபாரத்துறையில் விருத்தியுண்டு உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

**துலாம்:** மனதில் விரக்தி மனப்பான்மை உருவாகும். உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் தலைதூக்கும்.

**விருச்சிகம்:** இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத்தடுக்கும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

**தனுசு:** சேச்சுவன்மையினால் பெரும் புகழ் அடைவர். பெரியோர்களும் ஆசிகூறுவர். அரசியல் வாதிகளின் அதிக செல்வாக்கைப் பெறுவர்.

**மகரம்:** குருவின் ஆசியுடன் குதிக்கோளும்வெற்றி காணும் குன்றென நிமிர்ந்து நிற்பீர். குவிந்திடும் புகழும்.

**கும்பம்:** அலை மோதும் மனதுடன் அமைதியும் குன்றும் அலைவீசும் எதிரிகளும் காத்திருப்பர் இன்று.

**மீனம்:** தெவிந்தமனம், தெய்வசித்தை தேடிய திடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

சோதிடக் கலாநிதி [illegible]

யாழ். மாவட்ட

### பாடசாலைகள் கிரிக்கெட் போட்டிகள்

(யாழ்ப்பாணம், வெள்ளி)

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே இன்றும் நாளையும் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் இன்று மத்தியகல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

யாழ். இந்துக்கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ். இந்து மைதானத்தில் மோதுகின்றன.

கொக்குவில் இந்துக்கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் கொக்குவில் இந்து மைதானத்தில் மோதுகின்றன

தெல்லிப்பழை யூனியன்கல்லூரியும், வைத்தீஸ்வர வித்தியாலயமும் யூனியன்கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியும் ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் நாளையும் அதன் மறுதினமும் மோதுகின்றன. (தே. நி.)

### பண்டார வன்னியனுக்கு முதலிடம்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற வரலாற்று நாடகப் போட்டியில் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினரின் 'பண்டாரவன்னியன்' நாடகம் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த நாடகம் இன்று சங்கானையில் நடைபெறும் கலைவிழாவின் மேடையேறவிருக்கிறது.

### வதிரிக்கு சாம்பியன்கேடயம்

உடுப்பிட்டி, வியாழன்)

அல்வாய் வடக்கு இளங்கோ விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய ஐந்தாவது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழகம், நிக்கம் இளைஞர் கோஷ்டியை ஒரு கோலால் வென்று சாம்பியன் கேடயத்தைத் தட்டிக்கொண்டது.

ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாகவிருந்த இவ்விறுதிப் போட்டிக்குத் திரு. ஜே. எஸ். சத்தியநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். ஏ. மஜீத் சாம்பியன் கிண்ணத்தைப் பரிசளித்தார்.

### கட்டைவேலி ஆயுள்வேத வைத்தியசாலை

உடுப்பிட்டி. விளா.

கட்டைவேலிக் கிராமசபை இலவச ஆயுள்வேத அம்பத்திரி அல்வாயிலுள்ள கிராம சபைக் கட்டிடத்தில் ஒரு [illegible] இவ் ஆஸ்பத்திரி விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

### ''சர்வதேச நெருக்கடியும் உள்நாடும்''

(லட்சுமணபுரி, பெப். 14)

''சர்வதேச அரங்கில் நிகழும் சம்பவங்கள் உள்நாட்டிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துவது இயல்பு. எந்த நாடும் இன்று தனித்து வாழ முடியாது'' என்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்து நடந்த ஒன்பது கூட்டங்களில் திருமதி இந்திரா காந்தி நேற்றுப் பேசினார்.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி தற்காலிகமானதேயென்றும் கடந்த காலத்தில் போல் நெருக்கடிகளைச் சமாளித்து நாடு முன்னேறிச் செல்லும் என்றும் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

யாழ். மாவட்ட

### விசேட பொலிஸ் பிரிவு புதிய அலுவலக திறப்புவிழா

உடுப்பிட்டி, வியாழன்

யாழ்ப்பாண மாவட்ட விசேட பொலிஸ் பிரிவுத் தலைமைக் காரியாலயம் யாழ். பொலிஸ்நிலையப் புதிய கட்டடத்தின் ஒரு பகுதியில் திறுவப்பட்டுள்ளது. இவ்விசேட பொலிஸ் பிரிவுத் தலைமைக் காரியாலயம் எதிர்வரும் 23ந் திகதி காலை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. வான்டுவெஸிட்டினால் திறந்து வைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திறப்புவிழாவை முன்னிட்டுத் துரையப்பா ஸ்ரேடியத்தில் பொலிஸ் பகுதியினரின் மரியாதை அணிவகுப்பும் பாண்ட் இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரியும் 50 விசேட பொலிஸாரின் கடமைகள் புதிய தலைமைக் காரியாலயத்தினால் வகுக்கப்படவுள்ளது. விசேட உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வி. ரி. சிவலிங்கம் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

### ''மகனுடன் தவறணையிலிருந்து வரும்போது எங்களை வெட்டினார்''

மீசாலை, வியாழன்

''நானும் மகன் வேலுப்பிள்ளையும் கள்ளுத்தவறணையில் கள்ளுக் குடிக்கும்போது எதிரி எனது கள்ளுப்பிளாவைத் தட்டினார். நான் ஏன் தட்டினாய் என்று பேசினேன். பின்னர் நாங்கள் வீட்டுக்குப் போகும்போது வழியில் நின்று எனக்கும்மகனுக்கும் கத்தியால் வெட்டினார்.''

குடமியனையைச்சேர்ந்தசின்னக்குட்டி அவரின் மகன் வேலுப்பிள்ளை என்பவர்களுக்கு மிருசுவிலைச் சேர்ந்த சி. கோபாலபிள்ளை கத்தியால் வெட்டி காயமுண்டுபண்ணினாரென்று சாவகச்சேரி நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் சின்னக்குட்டி மேற்கண்டவாறுசாட்சி கூறினார்.

சின்னக்குட்டிவேலுப்பிள்ளை சாட்சியமளிக்கையில் தகப்பனை முதலிலும், என்னைமறுபடியும் எதிரி வெட்டினார் என்று கூறினார்.

நீலன் இராசன் சாட்சியத்தின்போது சம்பவம் நடந்த தினம் நாலரை மணி போல் எதிரி எனது சேவல்கத்தியை எடுத்துக்கொண்டு ஓடினார். நான் தடைசெய்தபோது உன்னையும் வெட்டுவேன் என்றார். சின்னக்குட்டியைமுதலில்எதிரி வெட்டியபின மகன் வேலுப்பிள்ளை ஓடிவர அவரையும் வெட்டினார். அவர்களிருவரும் அறிவுமயங்கி விழுந்தனர் எதிரி ஓட்டம் பிடித்தார் என்றார்.

நீதிபதி எதிரிக்கு 50 ரூபாய் அபராதம் விதித்துத்தீர்ப்பளித்தார்.

### தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா.

நேற்றுமுன்தினம் இழுக்கப்பட்ட தேசியலொத்தர்சபையின் 4?8-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

01 Q 0763 ரூபா. 55,210

இரண்டாவது பரிசு

20 X 0094 ரூபா 22,084

மூன்றாவது பரிசு

24 Z 0754 ரூபா 5,521

தலா ரூபா 276-05 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0291 | 09 A 0371 |
| 15 A 0849 | 21 A 0533 |
| 20 A 0258 | 23 A 0046 |
| 03 B 0460 | 11 B 0978 |
| 17 B 0207 | 01 C 0862 |
| 22 C 0007 | 23 C 0079 |
| 03 D 0323 | 12 D 0667 |
| 14 [illegible] 0620 | 10 E 0271 |
| 11 E 0248 | 13 [illegible] 0628 |
| 21 E 0913 | 02 F 0862 |
| 13 F 0241 | 14 F 0523 |
| 20 F 0210 | 03 G 0060 |
| 09 G 0030 | 15 G 0758 |
| 24 G 00?8 | 01 H 0627 |
| 04 H 0554 | 09 H 0423 |
| 13 H 0028 | 21 H 0658 |
| 06 J 0443 | 09 J 0175 |
| 11 J 0049 | 16 J 0490 |
| 23 K 01?3 | 24 K 0575 |
| 24 K 0747 | 06 L 0278 |
| 07 L 0799 | 08 L 0521 |
| 14 L 0090 | 22 M 0708 |
| 01 N 0825 | 06 N 0833 |
| 15 N 0239 | 06 O 0143 |
| 07 O 0414 | 10 O 0724 |
| 18 O 0477 | 19 O 0112 |
| 19 [illegible] 0687 | 21 O 0976 |
| 02 P 0200 | 05 P 0046 |
| 12 P 0019 | 13 P 0587 |
| 14 P 0118 | 22 P 0138 |
| 22 P 0356 | 08 Q 0558 |
| 18 Q 0996 | 06 R 0664 |
| 13 R 0409 | 17 R 0266 |
| 17 R 0443 | 24 R 0138 |
| 24 R 0373 | 03 S 0083 |
| 08 S 0180 | 14 S 0031 |
| 20 S 0005 | 20 S 0655 |
| 22 S 0038 | 22 S 0510 |
| 03 T 0452 | 03 T 0604 |
| 19 T 0917 | 21 T 0615 |
| 06 U 0301 | 17 U 0103 |
| 11 V 0745 | 16 V 0069 |
| 16 V 0305 | 17 V 0651 |
| 24 V 0289 | 05 W 0606 |
| 24 W 0517 | 07 X 0557 |
| 10 X 0434 | 16 X 0689 |
| 01 Y 0327 | 03 Y 0312 |
| 11 Y 0880 | 14 Y 0393 |
| 19 Y 0152 | 23 Y 0472 |
| 13 Z 0691 | 13 Z 0613 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

### பரீட்சையில் பலர் சித்தி

#### அரைநாள் விடுதலை

பருத்தித்துறை, வியாழன்

நேற்று முன்தினம் வெளியான க. பொ. த. (சாதாரண பரீட்சை) முடிவுகளின் படி சுமார் எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர் ஆங்கிலம், விஞ்ஞானப் பாடங்களில் அதிதிறமைச்சித்தி பெற்றதுடன், சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர் க.பொ.த. (உயர்தர) வகுப்பிற் பயிலவும் தகுதிபெற்றதால், நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் பிற்பகல்விடுதலையளிக்கப்பட்டது. முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றிய விஞ்ஞானத்துறை மாணவி ஒருவர் ஒரு பாடத்தில் அதிதிறமைச்சித்தியும், ஏழு திறமைச் சித்திகளும் பெற்றுள்ளார்.

### ஹரிதாஸ் சுவாமிகள் பஜனை

பருத்தித்துறை, வியாழன்

ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் நேற்றுமுன்தினம் கரவெட்டிப் பகுதியில் தமதுபஜனைக்கோஷ்டியுடன் வந்து பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடாத்தினர்.

அன்றிரவு அல்வாயிலுள்ள பரமானந்தஜி அனாதை ஆச்சிரமத்திலும் அவரும் அவரதுகுழுவும் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தை நடாத்தினார்கள். ஏராளமான பொதுமக்கள் இக் கூட்டங்களிற் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - அசோகன்
ஜெயலலிதா - மனோரமா
நடித்த
**எங்கள் தங்கம்**

**ஸ்ரீதர் சினிமா** யாழ்நகர்.
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் — ஜெயந்தி — வாணிஸ்ரீ
மனோரமா — தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்த
**வெள்ளி விழா**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி காட்சி 10-30, 2-30, 6-30, 9-30
தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
தமிழ்த்திரை உலகிலேயே இதுவரை செய்யப்படாத புதுமை இந்தப்படத்தில் புகுத்தப்பட்டு இருக்கிறது.
சிவாஜி - கே. ஆர். விஜயா - முத்துராமன்
பாலாஜி - நாகேஷ் ராஜஸ்ரீ - மனோகர்
எம். ஆர். ஆர். வாசு நடித்த






**ஸ்ரீ கோ** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30 மணிக்கு
காமினி மாலினி நடித்த **"ஹொந்தய் நரகய்"** சிங்களம்


## மாதர்முன்னேற்ற பணிமனை

உடுப்பிட்டி. விசா.

அல்வாய் தெற்கு மாதர் முன்னேற்றச்சங்கத்திற்கென ஐயாயிரம் ரூபா செலவில் பணிமனையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

—

## இருபது சத வீத

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கோருவதென்ற மற்றுமொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சேவைசெய்யும் ஆசிரியர்கள் வட மாநில வித்தியாதிபதி கந்தோர் ஒன்று ஆஸ்பத்திரி வீதியிலும் மற்றையது கஸ்தூரியார் வீதியிலும் இயங்குவதால் தமது கந்தோர் வேலைகளைக் கவனிப்பதில் பெரும் கஷ்டமடைவதால், இவ்விரு கந்தோர்களையும் ஒரே கட்டடத்தில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கல்விக் கந்தோருக்கு ஒரு புதிய கட்டடத்தை அமைக்கும் முயற்சியைத் துரிதப்படுத்துமாறு கல்வியமைச்சைக் கோருவதெனவும் இன்னுமொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் சங்கப் பணிமனையில் திரு. ஸ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - ஜெயந்தி
**புன்னகை**
**நாகம்மா** (கன்னடம்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர் ஜெயலலிதா நடித்த
**அரசகட்டளை**

**சாந்தி** (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி.ப. 2-30
ஜெய்சங்கர் — லக்ஷ்மி
**நவாப் நாற்காலி**
வி.வெ.ச.4-15, ஞா.10-30
TROPICS BY NIGHT

REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30 p.m.
Burt Reynolds
Clint Walker
SAM WHISKY
(coler)


# தேசிய ஐக்கியத்தை பாதுகாக்கும் ஒரே கட்சி

## ஐக்கிய தேசியக் கட்சிதான் என்கிறார் பட்டிருப்பு எம். பி.

### "ஜனநாயகம் பறிபோகிறது"

கேதீச்சரம், வியாழன்

"இன்று மக்களின் ஜனநாயக உரிமைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிக்கப்பட்டுவருகின்றன. எதேச்சாதிகாரமும் அடக்குமுறைகளும் தலைவிரித்தாடுகின்றன. இவற்றையெல்லாம் எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி போராடி வருகிறது. இன வித்தியாசமின்றி மதபேதமற்று மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான ஆட்சியை அமைக்கவேண்டும். மன்னார் இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரை வெற்றியடையச் செய்து அந்தச் சுதந்திர அணியில் சேருமாறு அழைக்கின்றேன்."

இவ்வாறு ஜாஎல தேசியப் பேரவை உறுப்பினர் திரு. பாரிஸ் பெரேரா முருங்கன் பஸ்நிலையத்திற்கு அருகாமையில் மன்னார் உப தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் ஜனாப் எம். எஸ். ஏ. ரஹீமை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. சம்பாஸிவா தலைமைவகித்தார்.

திரு. பாரிஸ் பெரேரா மேலும் கூறியதாவது:

"நாட்டில் விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. மக்களுக்களிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. ஆளுங் கட்சியினரை ஆட்சி பீடத்தில் ஏற்றிய மக்கள் இன்று அவர்கள்மேல் வெறுப்படைந்துள்ளனர். தேசத்தின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்த்துச் சுபீட்ச இலங்கையை அமைக்க ஐக்கிய தேசியக்கட்சியால் தான் முடியும்."

கேதீச்சரம், வியாழன்

"இந்நாட்டிலுள்ள ஒரேயொரு தேசிய அரசியல் ஸ்தாபனம் ஐக்கியதேசியக்கட்சியேயாகும். தேசத்தின் ஐக்கியத்தைக் கட்டிக்காப்பதும் வலுப்படுத்துவதும் பாதுகாப்பதும் அந்தக் கட்சியினாலேயே தான் இயலும்."

இவ்வாறு பட்டிருப்புத் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். யூ. தம்பிராசா மன்னார் இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் ஜனாப் எம். எஸ். ஏ. ரஹீமை ஆதரித்து மன்னார் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் திரு. எம். அரசரத்தினம் ரூேச் தலைமை வகித்தார். திரு. தம்பிராசா மேலும் பேசியதாவது:

"ஐக்கிய தேசியக்கட்சியில் தான் எல்லா மதங்களையும் எல்லா இனங்களையும் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேசியப் பேரவையில் உள்ளனர். சில கட்சிகளில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே இருக்கின்றனர். ஆளுங் கட்சித் தரப்பிலோ நியமனம் பெற்றவர்களும், கட்சிமாறிகளும், ஒட்டிக்கொண்டிருக்கும் கட்சிப் பிரதிநிதிகளுமே உள்ளவர். எனவே எல்லா மதங்களையும் அரவணைத்துச்செல்லும் ஐக்கிய தேசியக்கட்சிக்கே மக்கள் வாக்களிக்கவேண்டும்."

தேசியப் பேரவை உறுப்பினர் திரு. டென்ஸில் பெர்னண்டோவும் மற்றும் பலரும் பேசினர்.


**ராணி சினிமா** யாழ்நகர்.
தினசரி 4 காட்சிகள்
ஹாஸ்யப் பிரபு நாகேஷ் — ஜெயலலிதா
வி. கே. ராமசாமி — விஜயசந்திரிகா
மற்றும் பலர் நடித்த
**தேன்கிண்ணம்**

**றியோ சினிமா**
யாழ் நகர மண்டபம்
தினசரி: 10-30, 2-30, 4-45, 7-15 9-45
பயங்கரம் - அதிபயங்கரம்
இதுவரை கண்டிராத
கராட்டி — ஜூடோ
அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஓடி உலக சாதனையை நிலை நாட்டிய சித்திரம்!
**தி சைனீஸ் பொக்ஸர்**
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)






**ராஜா—யாழ்ப்பாணம்**
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45





சிவாஜி கணேசன்
சௌகார் ஜானகி
சுந்தரராஜன்
நாகேஷ் நிர்மலா
**பாபு**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூழ் குடித்த கணவன் மரணம்; மனைவி கைது

## எஞ்சிய கூழுக்கு நாயும் பலி;

## கூழ்சட்டியும் புதைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம், வெள்ளி] மனைவி கொடுத்த கூழைக் குடித்த கணவன் மரணமானதைத் தொடர்ந்து மனைவி சந்தேகத்தின் பீது கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவிருக்கிறார்.

கொக்குவில் கோயில் தோட்டம் என்ற இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நடேசு என்னும் 40 வயதானவர் திடீரென மரணமானதைத் தொடர்ந்து யாழ். நகர மரணவிசாரணை அதிகாரி திரு. வி. நடராஜா மரணவிசாரணை நடத்தினார்.

சாட்சியங்களைப் பதிவு செய்தபின் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி தீர்ப்பை ஒத்திவைத்தார்.

இதற்கிடையில் நடேசுவின் மரணம் சம்பந்தமாக யாழ். மாவட்ட விசேஷ குற்றத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து அதன் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் பத்மநாதன் ஆனைக்கோட்டைப் பொலிசுக்குப் பிறப்பித்த உத்தரவின் மீது தீவிர புலன் விசாரணை நடைபெற்றது.

இவ் விசாரணையிலிருந்து நடேசு குடித்த கூழில் நஞ்சு கலந்திருந்ததாகவும் அவர் விடுத்த எஞ்சியகூழைக் குடித்த நாய் ஒன்று மாண்டதாகவும் அந்தநாய் வீட்டுவளவினுள் புதைக்கப்பட்டிருந்ததுடன் அவர் குடித்த கூழ் இருந்த சட்டியும் புதைக்கப்பட்டிருந்ததாகவும் இவைகளைப் பொலிசார் தோண்டி எடுத்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட நடேசுவின் உடலுறுப்புக்கள் அரசாங்க ரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவாம்.

நடேசுவின் மனைவியான 36 வயது பரமேஸ்வரி பொலிசாருக்கு வாக்குமூலமளித்தார். இதன்பின் அவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## யாழ். குளத்தில் இ. போ. ச. புதிய பஸ் டயர்கள்!

(யாழ்ப்பாணம், வெள்ளி) உதிரிப்பாகங்கள் இல்லாத காரணத்தினால் வடபகுதியில் பஸ் சேவை குறைந்துவரும் நேரத்தில் இ. போ. ச. பஸ்களுக்குரிய புத்தம் புதிய டயர்கள் குளமொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள குளத்தை மாநகரசபை ஊழியர்கள் சுத்தம் செய்த சமயத்தில் இப் புதிய டயர்கள் சிக்கியதாகத் தெரிய வருகிறது.

இக்குளத்தில் ஏராளமான பழைய டயர்களுடன் 4 புதிய டயர்களும் காணப்பட்டதென்றும், டயர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் புதிய டயர்கள் எப்படி குளத்திற்கு வந்ததெனப் பொலிசார் தற்பொழுது விசாரணை செய்து வருகின்றனர். (க)

## "நெடுநாட்களுக்கு அரசியல் வியாபாரம் நடத்தமுடியாது"

யாழ்ப்பாணம், வெள்ளி

"அரசாங்க ஆதரவாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் தமது அதிகாரத்தைப் பாவித்து உண்மையான அரசாங்க ஆதரவாளர்களைப் பழிவாங்கிக்கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்தின் விரோதிகளுக்கு உதவிகள் செய்து நேச சக்திகளை பகைத்துக் கொண்டு நெடுநாட்களுக்கு தங்கள் அரசியல் வியாபாரத்தை நடத்தவேமுடியாது."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் லங்கா தொழிற்சங்களின் சம்மேளனக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொழிற்சங்க காரியதரிசி எஸ். நடராசா பேசுகையில் சோஸலிசத்திற்கு நேர் விரோதிகள் சோஸலிசம் பேசி நடைமுறையில் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற முயற்சிக்கின்றனர். இப்படியான சம்பவங்கள் பலவற்றைக்கூற முடியும்" என்றார்.




புகழ்

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்.

புகழ் பெறுமல் வாழ்வைக் கழித்த வருடைய உடம்பைச் சுமந்த நிலம், வசையற்ற வளமான பயனுகிய விளைவு இல்லாமல் குன்றிவிடும்.


சாவகச்சேரி இந்துக்கல்லூரி

க. பொ. த. (உ. த) வகுப்புப் பிரவேசம் — 1974

சாவகச்சேரி இந்துக்கல்லூரி க. பொ. த. (உ. த) முதலாம் வருட வகுப்புக்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் 22-2-1974 வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி வகுப்புக்கள் 1974-ம் ஆண்டு மார்ச்சு மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும்.

பூ. வெற்றிவேலு,
அதிபர்,

சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி,
13-2-1974. 620


## யாருடைய கூப்பன்?

கூப்பன் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஒட்டுமடத்தைச் சேர்ந்த குகதாசன் என்பவரால் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சியுடன் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## ஊழியருக்கு

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

முன்மொழிந்து பேசிய திரு. புரட்சிமாறன், மக்களைப்பாதுகாக்க வேண்டிய சட்டத்தின் காவலர்களான பொலிசாரின் இத்தாக்குதல் சனநாயகத்துக்கு விடப்பட்டது ஒரு சவால் என்றும் "இதனை நல்லவர்கள் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" என்றும் குறிப்பிட்டார்.

## இன்னமும்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

மூடைகளுக்கு 14 பேர் மட்டுமே உரிமைகோரினர்.

மிகுதி மூடைகள் நெற்சந்தைப்படுத்தும் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரம் ஏற்றிக் கொண்டுவந்த லொறியைச் சோதித்ததில் 90மூடை நெல் இருக்கக்காணப்பட்டது அவையும் நெற்சந்தைப் படுத்தும் பகுதிக்குப் போய்ச்சேர்ந்தது.

ஓடு ஏற்றிக்கொண்டு வந்த லொறியொன்றிலிருந்து 70 மூடைநெல் அகப்பட்டது. அதுவும் நெற்சந்தைப்படுத்தும் பகுதிக்கே போய்ச் சேர்ந்தது.

நெல் அல்லது அரிசிஏற்றி வரும் வாகனங்கள் பலவும் நெல்லியடியைச் சேர்ந்தவையாகவே இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இப்போதுள்ள சட்டத்தின் படி ஒருவர் தமது மாவட்டத்திற்குள் 4 புசல் நெல் அல்லது இரண்டுபுசல் அரிசியை வைத்திருக்கலாமென்றும் அதில்இது வரை மாறுதல் எதுவும் ஏற்படவில்லையென்றும் அரசாங்க அதிபர் சொன்னார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே சந்தை விலைக்கு நெல்லை வாங்கி அரிசியாக்கி விற்பது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா கூறினார்.

அதனை நெல்லைக் கொண்டு வருவதற்கு பெர்மிட் பெறலாம் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (கு.வி.ம.)

## நூல் நிலையங்களை

## பொழுதுபோக்கு இடமாக கருதலாகாது!

மாவிட்டபுரம், வியாழன்

"நற்பண்புகளும், நற்பழக்கங்களும் கொண்ட பிரஜைகளை உருவாக்க சனசமூக நிலையங்கள், நூல்நிலையங்கள் போன்றவற்றின் சேவை அத்தியாவசியமானதாகும். இந்நேரத்தில் இந்நிலையங்களை பொழுதுபோக்கு இடங்களாக மதியாது அறிவுக் களஞ்சியங்களாக மதித்து அவற்றின் மூலம் நல்ல பயனை அனுபவிக்கபொது மக்கள் முன்வர வேண்டும்."

இவ்வாறு பன்னாலை கணேசா சனசமூகநிலைய 32-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துரையாற்றிய பன்னாலை சேர். கனகசபைவித்தியாசாலை அதிபர் வித்துவான், சைவப்புலவர் வ.செல்லையா கூறினார்.

நிலையத்தலைவர் திரு. சி.சின்னத்தம்பு தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இன்று எமது மத்தியில் சிலர்தான் மற்றவர்களால் மதிக்கக்கூடிய வகையில் இருக்கிறார்கள். அவர்களைமனிதருள் மாணிக்கம் என்கிறோம். அந்நிலை மாறவேண்டும். மக்கள் எல்லோரும் மாணிக்கங்களாக வேண்டும். இதற்கு சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள் போன்றவற்றின் சேவை அவசியமானது" என்றார்.

மற்றும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி கனிஷ்ட அதிபர் திரு. செ. வரதராஜப்பெருமாள் உட்பட பலர்உரையாற்றிய பின்னர் பின்வருவோர் புதியநிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு சி சின்னத்தம்பு, உபதலைவர் சோ அம்பலவாணர், செயலாளர் ந. கிருஷ்ணமூர்த்தி, உபசெயலாளர்ச திருஞானசம்பந்தர், பொருளாளர் சொ. சண்முகலிங்கம்.

நிர்வாகசபை: இருவாளர்கள் வை ஜெயபாலன், வ யோகேஸ்வரன், ச கந்தசாமி, சி சிவபாலசுப்பிரமணியம், வீ சண்முகலிங்கம்.

## ஹைதராமணக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

12 லட்சத்து 62,77 ரூபாயும் அபராதமாக விதிக்கப்பட்டது. நான்காவது எதிரி மூர்ஜியானிக்கு ஐந்து லட்சத்து 81,401 ரூபாயும் அபராதம் விதிக்கப்பட்டது.

### 2 மாதத்துக்குள் செலுத்தவேண்டும்

இந்த அபராதத்தொகைகள் இரண்டுமாதத்துக்குள் செலுத்தப்பட வேண்டும். அபராதத் தொகையை குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறுவோர் மீது மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி கமிஷன் பின்னர் கூடித்தீர்மானிக்கும்.

குற்றவியல் நீதிக்கமிஷன் தீர்ப்பு இறுதியானது. இதற்கு அப்பீல் கிடையாது.

### கைவிலங்கை மறைத்தனர்

தீர்ப்பளிக்கப்பட்டதும் எதிரிகளுக்கு கைவிலங்கு போடப்பட்டது. அவர்கள் நீதிமன்றத்தினுள்ளேயிருந்து வெளியே அழைத்து வரப்பட்டதும் சிலர் கைவிலங்கைப் பத்திரிகைகளால் மறைத்துக் கொண்டனர். இரண்டாவது எதிரியான யூகோஸ்லாவியா நாட்டைச் சேர்ந்த ஸ்ரீபன் கலெடோவிக் தமது முகத்தை பத்திரிகையால் மறைத்துக் கொண்டார். மூன்றுவதுஎதிரி டாக்டர் மிலடானும் யூகோஸ்லாவியா நாட்டைச் சேர்ந்தவராவார்.

விசாரணைக்கமிஷன் தலைவர் திரு. ஜி. பி.ஏ.சில்வா எட்டுப் பக்கங்கள் கொண்ட தீர்ப்பை அறிவதற்காக நீதிமன்றத்தினுள்ளேயும் வெளியேயும் பெருந்திரளானோர் திரண்டிருந்தனர்.

முதலாவது எதிரி ஹைதராமணி 27 குற்றச்சாட்டுக்களிலும் இரண்டாவது எதிரி எட்டுக்குற்றச் சாட்டுக்களிலும் மூன்றுவது எதிரி 12 குற்றச் சாட்டுக்களிலும் நான்காவது எதிரிஏழு குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

### 2வருட புலன் விசாரணை

குற்றவியல் நீதிக்கமிஷன் (செலாவணி மோசடி) முதல் வழக்கும் தீர்ப்பும் இதுவேயாகும். இந்தியப் பொலிஸ், ஸ்கொட்லண்ட் யார்ட், மற்றும் வெளிநாட்டுத் துப்பறியும் பொலிசாரும் இலங்கைத் துப்பறியும்பொலிசார் இரண்டு வருடகால நடத்திய புலன் விசாரணையின் பயன்தான் வழக்காகும். (லி. பீ. ஏ)

## ஏப்ரல் கிளர்ச்சி

## கொழும்பை தாக்கத் திட்டம்

[கொழும்பு, வெள்ளி]

1972-ம் ஆண்டு ஏப்ரல் 5-ம் திகதி இரவு கொழும்பு நகரத்தை தாக்குவதற்காக எமது மாணவ இயக்கத்தைச் சேர்ந்தவர்களுடன் கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் வெடிமருந்துகள் ஆயுதங்கள் சகிதம் தாங்கள் காத்திருந்ததாக 15-வது சந்தேக நபர் குலரத்ன பண்டார பியசிறி இன்று ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பான குற்றவியல் விசாரணை குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

நாளை விசாரணைக் குழு முன்னிலையில் மேலும் 104 சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்படுவர்.

## முதலுதவிப் பரீட்சை சித்தி பத்திரங்கள்

இளையாணன், வியா'

வசாவிளான்மத்தியமகாவித்தியாலயத்தில் முதலுதவிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு தராதரப்பத்திரங்களைக் கல்லூரியின் அதிபரான திரு. பொ. சபாரெத்தினம் நேற்று முன்தினம் வழங்கினார்.

இப்பரிசளிப்பு விழாவில் முதலுதவிப்படையின் யாழ். மாவட்ட பிரதேச ஆணையாளரான சூசைதாசன் ச. பீ. இராசையாவின் ஆசிச்செய்தியும் வாசிக்கப்பட்டது அச்செய்தியில் அவர் "இந்தத் தராதரப்பத்திரங்கள் அகில உலக அங்கீகாரம் பெற்றதாகும்" என்றும் "மிகவும் பெருமதி வாய்ந்ததும்" என்றும் கூறி முதலுதவிப் பயிற்சி பெறஒவ்வொருவரும் இன மத வேறுபாடின்றி மனித சமுதாயத்தின் நற்பயனுக்காகப் பாடுபடவேண்டும்" என்றும் கேட்டிருந்தார்.

விழாமுடிவில் முதலுதவிப் படை உத்தியோகஸ்தர் ஆசிரியர் ந. கந்தசாமி ஐயர் நன்றியுரை கூறினார்.

## கலாச்சார—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திறந்து வைப்பார். கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்

மறுநாள்காலை கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் விதைபொருள் ஆராய்ச்சிவேலைகளைச் சென்று பார்வையிடுவார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் ... வீதி 69-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு பெப்ரவரி 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The EELANADU ... Box No. 69, Jaffna. Telegrams: ... பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org